A. Umera Fathima

# DEPARTMENT OF TAMIL

## SEMESTER - IV - NON MAJOR ELECTIVE - II

## BASIC TAMIL

## எழுத்தும் இலக்கியமும் அறிமுகம் - II

Hrs / Week : 2 Code : 08ULBT4602

Credits : 2 Max. Marks : 100

**நோக்கம்** : கீழே தரப்பட்டுள்ள பாடங்களின் வழி - தமிழை எழுத வாசிக்கப் பயிற்றுவித்தல்.

அலகு 1 : சந்தை - பொருள்கள் - காய்கறிகள், பழங்கள், முதலியவற்றின் பெயர்களை எழுதப் படிக்கவும், அவை தொடர்பான வாக்கியங்கள் அமைக்கவும் பயிற்றுவித்தல், திசைகள் - பற்றி எழுதப் படிக்கக் கற்பித்தல், குடும்பம் - உறுப்பினர்கள் - உறவுமுறைச் சொற்கள், தொடர்கள் போன்றவற்றை வாசிக்க எழுதப் பயிற்றுவித்தல்.

அலகு 2 : பொங்கல் திருநாள் - தமிழ்நாடு - விழாக்கள் - சிறப்பு - பொங்கல் நிகழ்ச்சிகள் பற்றி அறியச் செய்தல் - மழை - கடல், வானம், மேகம், ஆறு, குளம், கிணறு, மலை - முதலியன பற்றிய சொற்கள் தொடர்களைக் கற்பித்தல்.

அலகு 3 : பாரதியார் பற்றிக் கூறல் - அவர் கவிதைகள் அறிமுகம் - சிலப்பதிகாரம் கதையைக் கூறல் - அவை தொடர்பான செய்திகளை வாசிக்க எழுதப் பயிற்றுவித்தல்.

அலகு 4 : பயணம் - வகைகள் சுற்றுலா, கல்விச்சுற்றுலா பயணம் செய்யும் முறைகளை விளங்க வைத்தல் - தொடர்பான வார்த்தைகளை எழுத - படிக்கத் செய்தல்.

அலகு 5 : வாழ்த்துப்பாடல்கள் - விளக்கம் - வகைகள் - இயற்கை மொழி, இறை வாழ்த்துக்கள் - சான்றுகள் சிலப்பதிகாரம், பாரதியின் தமிழ்மொழி வாழ்த்து, கம்பராமாயணம் - சீறாப்புராணம் கடவுள் வாழ்த்து - கடித வகைகள் - அன்னைக்கு, நண்பருக்கு, புகார் எழுதப் பயிற்றுவித்தல், நாட்டுப்புறப் பாடல்கள் அறிமுகம் - தாலாட்டு, காதல்.

# UNIT - I

## பலசரக்குகள் - SUNDRIES

| | | | |
|---|---|---|---|
| 1. | அவரை | - | Beans |
| 2. | இஞ்சி | - | Ginger |
| 3. | உப்பு | - | Salt |
| 4. | உளுந்து | - | Black Gram |
| 5. | உள்ளிப்பூண்டு | - | Garlic |
| 6. | எண்ணெய் | - | Oil |
| 7. | ஏலக்காய் | - | Cardamom |
| 8. | கசகசா | - | Poppy |
| 9. | கடலை | - | Bengal Gram |
| 10. | கம்பு | - | Millet |
| 11. | மஞ்சள் | - | Turmeric |
| 12. | குங்குமப்பூ | - | Saffron |
| 13. | கேழ்வரகு | - | Ragi |
| 14. | கொள்ளு | - | Horse Gram |
| 15. | கோதுமை | - | Wheat |
| 16. | சீரகம் | - | Cumin |
| 17. | தனியா | - | Coriander |
| 18. | தயிர் | - | Curd |
| 19. | துவரை | - | Red Gram |
| 20. | தேங்காய் எண்ணெய் | - | Coconut Oil |

## காய்கள் - VEGETABLES

| | | | |
|---|---|---|---|
| 1. | உருளைக்கிழங்கு | - | Potato |
| 2. | கத்தரிக்காய் | - | Brinjal |
| 3. | பாகற்காய் | - | Bitter Gourd |
| 4. | பூசணிக்காய் | - | Pumpkin |
| 5. | புடலங்காய் | - | Snake Gourd |
| 6. | சுரைக்காய் | - | Gourd |
| 7. | முட்டைகோஸ் | - | Cabbage |
| 8. | முருங்கைக்காய் | - | Drum Stick |
| 9. | வாழைக்காய் | - | Green Plantain |
| 10. | வெண்டைக்காய் | - | Lady's Finger |

## பழங்கள் - FRUITS

| | | | |
|---|---|---|---|
| 1. | மா | - | Mango |
| 2. | பலா | - | Jack Fruit |
| 3. | வாழை | - | Banana |
| 4. | அன்னாசி | - | Pine Apple |
| 5. | தர்பூசணி | - | Watermelon |
| 6. | பப்பாளி | - | Papaya |
| 7. | அத்திப்பழம் | - | Fig |
| 8. | திராட்சை | - | Grapes |
| 9. | மாதுளம் | - | Pomegranate |
| 10. | பேரீச்சம்பழம் | - | Date Fruit |

## மலர்கள் - FLOWERS

| | | |
|---|---|---|
| 1. முல்லை | - | Arabian Jasmine |
| 2. ரோஜா | - | Rose |
| 3. மல்லிகை | - | Jasmine |
| 4. தாமரை | - | Lotus |
| 5. அல்லி | - | Lilly |
| 6. சூரியகாந்தி | - | Sun Flower |
| 7. செம்பருத்தி | - | Shoe Flower (*Hibiscus*) |
| 8. சாமந்தி | - | Carnomile |
| 9. ரங்கூன் மல்லிகை | - | Rangoon Creeper |
| 10. நந்தியாவட்டை | - | Water Solder |

## உறவுமுறைகள் - RELATIONSHIPS

| | | |
|---|---|---|
| 1. தந்தை | - | Father |
| 2. தாய் | - | Mother |
| 3. மகன் | - | Son |
| 4. மகள் | - | Daughter |
| 5. அண்ணன் | - | Brother |
| 6. அக்கா | - | Sister |
| 7. தாத்தா | - | Grand Father |
| 8. பாட்டி | - | Grand Mother |
| 9. மாமா | - | Uncle |
| 10. அத்தை | - | Aunty |

## திசைகள் - DIRECTIONS

1. வடக்கு - North
2. தெற்கு - South
3. மேற்கு - West
4. கிழக்கு - East

## பலசரக்குகள் - தொடர்கள்

1. அவரை ஒரு பருப்பு வகை.
2. இஞ்சி மருத்துவ குணம் கொண்டது.
3. உப்பு உணவுக்கு முக்கியமானது.
4. உளுந்து சத்தான உணவு.
5. பூண்டு ரசம் சுவையானது.
6. எண்ணெய் கொழுப்பு சத்துக்கு அடிப்படை.
7. ஏலக்காய் ஒரு வாசனைப் பொருள்.
8. கசகசா ஒரு மசாலாப் பொருள்.
9. கடலை புரதச்சத்து மிக்கது.
10. கம்பு பழங்கால உணவு.
11. கஸ்தூரி வாசனைப் பொருள்.
12. குங்குமப்பூ விலைமதிப்புள்ளது.
13. கேழ்வரகுக் கூழ் சத்தான பானம்.
14. கொள்ளு இரும்புச்சத்து உடையது.
15. கோதுமை வட இந்தியாவின் பிரபலமான உணவு.
16. சீரகம் சீரணச்சத்து மிக்கது.

17. தனியா ஒரு சமையல் பொருள்.

18. தயிரை வாங்கி வா.

19. துவரைப் பருப்பு தருக.

20. தேங்காய் எண்ணெய் தலைக்குப் பூசுவர்.

## காய்கறிகள் - தொடர்கள்

1. உருளைக்கிழங்கு புரதச் சத்து மிக்கது.
2. கத்தரிக்காய் விலை குறைவானது.
3. பாகற்காய் கசப்பான உணவு.
4. பரங்கிக்காய் உடலுக்கு நல்லது.
5. புடலங்காய் நீர் சத்து மிக்கது.
6. பூசணிக்காய் அல்வா பிரபலமானது.
7. முட்டைகோஸ் நீலகிரியில் விளைகிறது.
8. முருங்கைக்காய் சாம்பார் சுவையானது.
9. பொரியல் செய்ய வாழைக்காய் பயன்படும்.
10. சிந்தனைத் திறன் வளர வெண்டைக்காய் உதவுகிறது.

## பழங்கள் தொடர்கள்

1. வறட்சியைத் தாங்கி மா மரம் வளரும்.
2. கேரள மாநிலத்தில் பலா அதிகம் விளைகிறது.
3. திருச்சியில் தேசிய வாழை ஆய்வு மையம் அமைந்துள்ளது.
4. அன்னாசிப் பழம் எடைக் குறைவுக்குப் பயன்படுகிறது.

5. கோடைக்கு ஏற்றது தர்பூசணி.

6. பப்பாளியில் சத்து அதிகம்.

7. குளிர் பிரதேசங்களில் அத்திமரம் வளராது.

8. திராட்சை இனிப்புச் சுவை கொண்டது.

9. மாதுளை சிவப்பு நிறத்தில் இருக்கும்.

10. அரேபியா நாட்டின் பெருமை பேரீச்சம்பழம் ஆகும்.

**மலர்கள் - தொடர்கள்**

1. முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி.

2. ரோஜா இங்கிலாந்து நாட்டின் தேசியச் சின்னம்

3. மல்லிகை நறுமணம் மிக்கது.

4. தாமரை இந்தியாவின் தேசிய மலர்.

5. அல்லி நீரில் பூக்கும் மலர்.

6. சூரியகாந்தி வித்து எண்ணெய் எடுக்க பயன்படும்.

7. மூலிகை மருத்துவத்துக்குச் செம்பருத்தி பயன்படுகிறது.

8. சாமந்தியின் மாற்றுப்பெயர் செவ்வந்தி.

9. மல்லிகைகளில் ஒரு வகை ரங்கூன் மல்லிகை.

10. நந்தியாவட்டம் ஒரு மலர்ச்செடி.

**உறவுமுறைகள் - தொடர்கள்**

1. என் தந்தை ஆசிரியர்

2. அவரது தாய் மிகவும் அன்பானவர்.

3. பாரியின் மகன் மருத்துவர்

4. நேருவின் மகள் இந்திரா

5. அண்ணன் பெயர் அன்பழகன்

6. அக்கா அணிகலனை வாங்கினார்

7. எங்கள் தாத்தா ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி.

8. பாட்டி ஜிலேபி தந்தார்.

9. கபிலனின் மாமா பொறியாளர்

10. அன்பழகனின் அத்தை ஆசிரியை

## திசைகள் - தொடர்கள்

1. இமயமலை இந்தியாவின் வடக்கு எல்லையில் அமைந்துள்ளது.

2. குமரிமுனை இந்தியாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது.

3. அரபிக்கடல் பகுதி மேற்குக் கரையாகும்.

4. கிழக்கு வங்காளம் வங்கதேசமாக உருவானது.

ஃ

# UNIT - II

## தமிழ்நாடு

உலகச் செம்மொழிகளுள் தமிழ் ஒரு முக்கிய மொழியாகும். தமிழ்கூறும் நல்லுலகின் தாயகம் தமிழ்நாடு. பழங்காலத் தமிழகத்தைச் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர் ஆண்டனர். உலகின் பொதுநூலாகப் போற்றப்படும் திருக்குறள் தமிழில் தோன்றியது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளும் பசுமை மேவிய காடுகளும் தமிழ்நாட்டு மழைவளத்தின் உயிர் நாடியாகும். தமிழர் பண்பாட்டில் உயர்ந்தவர்கள். வேளாண்மை தமிழரின் தொன்மையான தொழிலாகும். காவிரி, தாமிரபரணி, வைகை முதலிய ஆறுகள் தமிழகத்தில் பாய்ந்து மாநிலத்தை வளம் கொழிக்கச் செய்கின்றன. தமிழர் கொண்டாடும் திருவிழாக்களுள் உழவர் திருநாள் முதன்மையானது.

## பொங்கல் திருநாள்

உலக வேளாண்மைச் சமூகங்கள் கொண்டாடும் திருவிழாக்களுள் அறுவடைத் திருவிழா முதன்மையானது. தமிழகத்தில் இத்திருவிழா பொங்கல் திருநாள் என்றும் தமிழர் திருநாள் என்றும் அழைக்கின்றனர். தைத் திங்கள் முதல் நாளில் மக்கள் பொங்கல் கொண்டாடுகின்றனர். தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது பழமொழியாகும். தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது. புது அரிசி வெல்லம் ஆகியவற்றைக் கொண்டு பொங்கல் வைப்பர்.

மாட்டுப் பொங்கல் மஞ்சு விரட்டு ஆகியன தமிழர் திருநாளையொட்டி நடைபெறும் முக்கியமான நிகழ்ச்சிகளாகும்.

தீபாவளி, ஈகைப் பெருநாள் (ரம்ஜான்), தியாகப் பெருநாள் (பக்ரீத்), கிறித்து பிறப்பு, ஆங்கிலப் புத்தாண்டு தினம் ஆகிய விழாக்களையும் தமிழகத்தில் மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவர்.

## மழை

1. விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி.
2. உழவுத் தொழிலுக்கு மழைவளம் அடிப்படையாக உள்ளது.
3. மலைகள், காடுகள் மழைப்பொழிவுக்குக் காரணமாக உள்ளன.

## கடல்

1. உலகம் கடலால் சூழப்பட்டுள்ளது.
2. எண்ணற்ற உயிரினங்கள் கடலில் வாழ்கின்றன.
3. புகார் நகரம் கடலில் மூழ்கியது.

## மேகம்

1. கவிஞர் மேகக்கூட்டங்களை வருணித்துப் பாடுகின்றார்.
2. மேகங்கள் குளிர்நிலவை மறைக்கின்றன.
3. மேகங்கள் குவிந்து மழையைப் பொழிகின்றன.

## ஆறு

1. வைகை ஆற்றின் சிறப்பு இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.
2. கங்கை இந்தியாவின் தேசிய ஆறு ஆகும்.
3. நைல் ஆறு எகிப்து நாட்டின் கொடையாகும்.

**வானம்**

1. வானம் நீலநிறத்தில் உள்ளது.
2. வானவூர்திகள் பயணங்களைச் சுருக்குகின்றன.
3. பருந்து வானுயர பறக்கிறது.

**குளம்**

1. குளங்கள் பாசனத்துக்குப் பயன்படுகின்றன.
2. குளங்கள் ஏரிகள் முதலிய நீர்நிலைகளை ஆக்கிரமித்தல் வெள்ளம் சூழ்வதற்குக் காரணமாகின்றன.
3. கழிவுகள் குளத்தில் கலக்காமல் தடுக்க வேண்டும்.

**கிணறு**

1. ஆழ்துளைக்கிணறுகள் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றன.
2. பொதுக் கிணறுகளில் அனைவரும் நீர் இறைக்கலாம்.
3. கிணறுகளில் மீன் வளர்ப்பர்.

**மலை**

1. மேற்குத் தொடர்ச்சி மலைகள் உயிர்ச்சூழல்கள் நிறைந்தவை.
2. புவி வெப்பத்தால் பனிமலைகள் உருகுகின்றன.
3. நீலகிரி மலை தமிழகத்தின் குளிர்ப் பகுதிகளில் ஒன்று.

௯

## UNIT - III *(அலகு 3)*

### பாரதியார்

பாரதியார் சிறந்த தமிழ்க் கவிஞர். அவர் 'மகாகவி', 'தேசியக்கவி' போன்ற பட்டங்களால் சிறப்பிக்கப்படுகிறார். அவர் பலவகையான கவிதைகளை எழுதினார். இந்திய நாட்டின் விடுதலையை நாடி அதன் பெருமைகளைப் பாடினார். ஞானப் பாடல்கள், பக்திப் பாடல்கள் போன்ற பாடல்களையும் எழுதினார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் ஆகும். புதிய ஆத்திசூடியும் எழுதினார்.

பாரதியார் சிறந்த கவிஞர் மட்டுமல்ல. அவர் ஒரு நல்ல கட்டுரையாளர், கதாசிரியர், இதழாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர். 'ஞான ரதம்' பாரதியார் எழுதிய அற்புதமான கற்பனைக் கதை. அவர் தன்னையே கேலி செய்து எழுதியது 'சின்ன சங்கரன் கதை'. மேலும் அவர் பல நூறு கட்டுரைகள் எழுதியுள்ளார். 'A fox with a golden tail' என்பது அவர் எழுதிய ஆங்கில நூல். பாரதியார்,

நமக்குத் தொழில் கவிதை
நாட்டுக்கு உழைத்தல்
இமைப் பொழுதும்
சோராது இருத்தல்

என்று வாழ்ந்தவர். 'அச்சம் தவிர்', 'மனதில் உறுதி வேண்டும்', 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி', 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' போன்ற பல உன்னத சிந்தனைகளை அவர் கவிதைகளில் காணலாம்.

ஒ

# சிலப்பதிகாரம்

தமிழ்மொழியின் முதல் காப்பியம் ‘சிலப்பதிகாரம்’. இதனை எழுதியவர் இளங்கோ அடிகள். ‘சிலம்பு’ என்பது பெண்கள் காலில் அணியும் ஓர் அணிகலன். ‘சிலம்பு’ + ‘அதிகாரம்’ =சிலப்பதிகாரம். இது சிலம்பால் ஏற்படும் நிகழ்ச்சிகள் கொண்ட கதை.

இக்காப்பியம் மூன்று பிரிவுகள் கொண்டது. அவை புகார்க் காண்டம், மதுரைக் காண்டம் மற்றும் வஞ்சிக் காண்டம். ஒவ்வொரு பிரிவிலும் பத்து காதைகள் உள்ளன. மொத்தம் முப்பது காதைகள் (காண்டம் என்றால் பிரிவு; காதை என்றால் கதை i.e. Canto and episode)

கோவலன் என்பவன் கண்ணகி என்பவளை மணந்தான். அவர்கள் பூம்புகார் நகரில் வாழ்ந்தனர். மாதவி என்பவள் நடனப்பெண். கோவலன் அவளின் நடனத்தைக் கண்டு மயங்கினான். தன் செல்வங்களை அவளிடம் இழந்தான். கண்ணகியிடம் இரண்டு சிலம்புகள் மட்டுமே எஞ்சி இருந்தன. கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அவளின் ஒரு சிலம்பை மட்டும் விற்று பணம் பெற முயன்றான். மதுரைநாட்டு அரசியின் சிலம்பு அப்போது திருடப்பட்டிருந்தது. கோவலன்தான் திருடன் என்று முடிவுசெய்து அவனைக் கொன்று விடுகின்றனர். இதனால் கோபம் கொண்ட கண்ணகி மதுரைக்குத் தீ மூட்டி எரித்தாள். பின்பு வஞ்சி நகருக்குச் சென்று விட்டாள். இதுவே இக்காப்பியத்தின் கதை.

ஞ

# UNIT - IV *(அலகு 4)*

## சுற்றுலா

சுற்றுலா என்பது மகிழ்ச்சிப் பயணம். புதிய இடங்களைக் காண்பதில் மனம் மகிழ்ச்சி அடையும். புத்துணர்ச்சி வரும். எனவே சிறுவர், பெரியவர் அனைவரும் சுற்றுலாச் செல்ல விரும்புவர். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் செல்வது கல்விச் சுற்றுலா. பாடங்களில் படிக்கும் இடங்களை நேரில் கண்டு விளக்கம் பெறுவதே கல்விச் சுற்றுலாவின் நோக்கம். குடும்பத்தினர் செல்வது இன்பச் சுற்றுலா.

தமிழகத்தில் பல சுற்றுலாத் தளங்கள் உள்ளன. அவற்றைப் பொதுவாக வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் என்றும் இயற்கை அழகுமிக்க இடங்கள் என்றும் இருவகைப்படுத்தலாம். நம் மக்கள் மட்டுமின்றி வெளிநாட்டினரும் வியந்து பார்க்கும் இடங்கள் பல நம் நாட்டில் உண்டு. தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், மாமல்லபுரம், சித்தன்னவாசல், குடுமியான்மலை, தாராபுரம், கிருஷ்ணாபுரம், ராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருமலைநாயக்கர் மகால் போன்றவை சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலை நிறைந்த இடங்களாகும். உதகை, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை போன்ற மலைகளும், குற்றாலம், ஒகேனக்கல், பாபநாசம், கும்பக்கரை, சுருளிதீர்த்தம் போன்ற அருவிகளும், வேடந்தாங்கல், கோடியக்கரை, கூடங்குளம் போன்ற பறவை சரணாலயங்களும் இயற்கை எழில் நிறைந்த இடங்களாகும்.

இந்தியாவிற்கு பெருமை தரும் உலக அதிசயம் தாஜ்மகால், உலகின் மிக உயரமான சிகரம் உள்ள இமயமலை போன்றவையும் நம் நாட்டில் சுற்றுலாவை வளர்க்கின்றன.

**சுற்றுலா பற்றிய தொடர்கள்**

1. சுற்றுலா மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும்.

2. சுற்றுலா இயற்கை மீது ஈடுபாடு தரும். சுற்றுச்சூழல் பற்றி விழிப்புணர்வு தரும்.

3. தமிழ்நாடு சுற்றுலா என்னும் அரசு அமைப்பு சுற்றுலா வளர்ச்சிக்குப் பணியாற்றுகிறது.

4. சுற்றுலா வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்துகின்றது.

5. சுற்றுலாவால் மொழி, இனம், மதம் மற்றும் நாடு ஆகிய பிரிவுகளுக்கு இடையில் நல்லிணக்கம் உண்டாகின்றது.

6. சுற்றுலாவால் மலையேற்றம் (mountaineering), பனிச்சறுக்கு (ice skating), அலைச்சறுக்கு (surfing), கடல் குடைதல் (scuba diving), வானளாவல் (parachuting), காடுலாவல் (trekking) போன்ற சாகசக் கலைகள் வளர்கின்றன.

7. சுற்றுலா நாட்டின் பொருளாதார ஏற்றத்திற்கு இன்றியமையாதது.

8. சுற்றுலா பண்பாடுகளின் பொதுக்கூறுகளை உறுதிப்படுத்துகின்றது.

ஞ

# UNIT - V - அலகு - 5

## வாழ்த்துப்பாடல்

வாழ்த்து என்றால் நற்சொல். சகமனிதர்கள், சக உயிர்களுக்கு நன்மாராயம் கூறும் ஒலியாக வாழ்த்து திகழ்கின்றது. வணக்கம் என்பது வழிபாடு; இது இறைவனுக்கு மட்டுமே உரியது. வாழ்த்து, வணக்கம் ஆகிய சொற்கள் பொருள் வேறுபாடுகளுக்கு அப்பால் இலக்கியங்களிலும் சொற்பொழிவுகளிலும் பயனாக்கம் பெறுவதைக் காணமுடியும்.

### இயற்கை வாழ்த்துப்பாடல்

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் காப்பியத்தில் இயற்கை போற்றப்படுகிறது.

*திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!*
*ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!*
*மாமழைபோற்றுதும்! மாமழை போற்றுதும்!*
*பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!*

என திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் நகரம் ஆகியவற்றைப் போற்றி காப்பிய ஆசிரியர் பாடுவது இயற்கையின் மீதும் தாம் வாழும் நகரின் மீதும் வைத்துள்ள பற்றைக் காட்டுகிறது.

## கடவுள் வணக்கத்தில் பொதுமை நிலை

மேலைநாட்டு இலியது எனும் காப்பியத்துக்கு இணையாக தமிழில் இயற்றப்பட்ட காப்பியம் கம்பராமாயணம். வைணவச் சமயத்தில் கடவுளின் ஓர் அவதாரமாகக் கருதப்படும் இராமனைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இக்காப்பியம் இயற்றப்பட்டது. இக்காப்பியத்தை இயற்றிய கவிச்சக்கரவர்த்தி கம்பர் கடவுள் வணக்கப் பாடலில்,

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க்கே சரண் நாங்களே

என்று எந்தவொரு சமயக் கடவுளின் பெயரையும் குறிப்பிடாமல் தலைவர் எனப் பொதுவாக அழைக்கும் பாங்கு அவரது பொதுமை நெறியைப் புலப்படுத்துகிறது.

### அனைத்துக்கும் மேலானவன் இறைவன்

இஸ்லாமியக் காப்பியங்களுள் மணிமகுடமாகத் திகழ்வது உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் ஆகும். அழகுக்கும் அழகு தருபவனாகவும், தோன்றித் திகழ்கின்ற பொருள்கள் அனைத்துக்கும் மேலான பொருளாகவும், தெளிந்த அறிவினுக்கு அறிவாகவும், நறுமணம் அனைத்துக்கும் மணம் தருகின்ற மணமாகவும், அணுவினுள்ளும் அணுவாகவும், ஒளிகள் அனைத்துக்கும் மேலான ஒளியாகவும் உலகில் தோன்றி வாழும் அனைத்து உயிர்களின் கருவுக்கும் கருவாகவும் திகழ்ந்து உலகத்தைக் காப்பாற்றும் இறைவன் மனதின்கண் இருத்தல் வேண்டும் என்பதை,

திருவினுந் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்

தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த

மருவினு மவருா யணுவினுக் கணுவாய்

மதித்திடாப் பேரொளி யனைத்தும்

பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்

பூதலத் துறைந்தபல் லுயிரின்

கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த

கருத்தனைப் பொருத்துதல் கருத்தே

என்ற பாடலில் இறைவன் இப்பிரபஞ்சத்தைப் படைத்து பரிபாலிப்பவன்; ஒப்பற்றவன் என்பதை புலவர் எடுத்துரைக்கிறார்.

## மொழிவாழ்த்து

அடிமைத்தனத்தையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒருசேர எதிர்த்தவர் மகாகவி பாரதியார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனப் பல மொழிகளைக் கற்றறிந்த பன்மொழிப்புலவர் இவர். இந்திய ஒருமைப்பாடு, ஆன்மநேய உணர்வு ஆகியவற்றில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்தாலும் தமிழின் இனிமை பாரதியாரைத் தாய்மொழிப் பற்றாளராக மாற்றியது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்

இனிதாவது எங்கும் காணோம்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும் வகை செய்தல் வேண்டும்

என்று தமிழ்மொழி உலகம் முழுவதும் பரவுவதற்குத் தமிழர் பாடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

## கடித வகைகள்

கடிதங்கள் பலவகை என்றாலும் ஒவ்வொரு வகைக் கடிதத்திற்கும் ஒரு தனி வடிவம் உண்டு. கடித உறுப்புக்கள் எல்லாவகைக் கடிதத்திற்கும் பொதுவானவை. அவை:

1. தலைப்பு
2. முகவுரை
3. விளி
4. செய்தி
5. உறவுத்தொடர் மொழி
6. கையெழுத்து
7. முகவரி

என ஏழு.

**கடித வகைகள்**

கடிதங்கள் பல திறத்தன. ஆயினும் அவற்றை உறவாடல் கடிதங்கள் (Social Letters), தொழில் முறைக் கடிதங்கள் (Business Letters) என இருவகையாகப் பிரிக்கலாம்.

உற்றார், உறவினர், நண்பர் ஆகியோர்க்கு எழுதும் கடிதங்கள் உறவாடல் கடிதங்கள். வேலை விண்ணப்பம், வணிகக் கடிதம் முதலியன தொழில்முறைக் கடிதங்கள்.



7/3/

## (எ.கா) : உறவாடல் கடிதம்

(உணவு விடுதியில் உள்ள மாணவன் ஒருவன் தன் தந்தைக்கு எழுதுவது)

காஜாமியான் விடுதி,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சி - 620 020.
2.3.2010

அன்புமிக்க அப்பா,

நலம். நலம் அறிய ஆவல். சென்ற மாதம் நான் எழுதிய கடிதம் கிடைத்திருக்கும் என நினைக்கிறேன். அதன்படி நன்கு படித்துக் கொண்டிருக்கிறேன்.

தேர்வு வரும் திங்கட்கிழமை தொடங்குகிறது. தொடர்ந்து பத்து நாட்கள் அது நடைபெறும்.

தேர்வு முடிந்ததும் ஊருக்கு வருகிறேன். அம்மாவுக்கும் அண்ணனுக்கும் என் வரவைப் பற்றித் தெரிவியுங்கள். பணம் ஏதும் அனுப்ப வேண்டாம். போதிய அளவு இருக்கிறது.

தங்கள் அன்பு மகன்
**கா. இம்ரான்**

உறைமேல் முகவரி:

பெறுநர் :

திரு. சா.காஜா,
18, பெரியபள்ளி தெரு,
கூடலூர்,
தேனி மாவட்டம்.

## தொழில்முறைக் கடிதம்

(புத்தக விற்பனையாளர் ஒருவர் சில புத்தகங்களை அனுப்புமாறு ஒரு பதிப்பகத்திற்கு எழுதுவது)

'குறிஞ்சி இல்லம்'
10, வடக்கு வீதி, முல்லைநகர்,
திருச்சி - 21
30.4.2010

**உரிமையாளர்,**
இளஞ்சுடர் பதிப்பகம்
10, நேதாஜி தெரு
சென்னை - 600 017

ஐயா,

தங்கள் பதிப்பகம் மிக உயர்ந்த நூல்களை மிகக் குறைந்த விலைக்குத் தருவது மகிழ்ச்சியளிக்கிறது. நாடெங்கும் கல்வி பரவ இது போன்ற தொண்டுள்ளம் கொண்ட பதிப்பகங்கள் பல தோன்ற வேண்டும் என விரும்புகிறேன். தங்கள் வெளியீடுகளான பின்வரும் நூல்களில் பத்துப் பத்துப் பிரதிகள் டி.வி.எஸ்.பார்சல் சர்வீஸ் மூலம் அனுப்பி வைக்கவும்.

1. திருக்குறள் (உரையுடன்), மு.வ.,
2. நானோ டெக்னாலஜி, சுஜாதா
3. பாரதியார் கவிதைகள்
4. புத்ர, லா.ச.ரா.
5. பிரமிள் படைப்புக்கள்

தங்கள் உண்மையுள்ள
அ.ராஜா

## நாட்டுப்புறப்பாடல்கள்

வாய்மொழிப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் எனப்படுகின்றன. ஒரு குழந்தை பிறக்கும்போதும் அழும்போதும் தூங்கச் செல்லும்போதும் விளையாடும்போதும் இப்பாடல்கள் பாடப்படுகின்றன. மேலும் சடங்குகள், திருமணங்கள், தொழிற்களங்கள், இறப்புகள் ஆகிய சூழல்களிலும் நாட்டுப்புறப் பாடல்களை மக்கள் பாடுவர்.

- தாலாட்டுப் பாடல்கள்
- தெம்மாங்குப் பாடல்கள்
- திருமணப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்

ஆகியன நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளாகும்.

### தாலாட்டுப்பாடல்

அழும் குழந்தைகளைத் தூங்க வைக்க குழந்தையின் தாயோ அல்லது உறவினர் பெண்ணோ பாடும் பாடலுக்குத் தாலாட்டுப் பாடல் என்பர். 'தால்' என்றால் நாவு. இது நாவை அசைத்துப் பாடுவது.

கண்ணே ஒன்னை யாரடிச்சார்?

கண்மணியைத் தொட்டது யார்?

பொன்னே ஒன்னை யாரடிச்சார்?

பொன்மணியைத் தொட்டது யார்?

எனும் பாடலில் குழந்தையைக் கண்ணே பொன்னே என வருணிக்கும் பாங்கு இலக்கியச்சுவை கொண்டதாக விளங்குகிறது.